# இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் / pure in heart

பக்தியுள்ள ஒவ்வொருவரும் கடவுளை வணங்கும்போது கடவுளை மனதார தரிசிப்பதாகவும், பயபக்தியோடு இருதயத்திலே சுத்தமுள்ளவர்களாக வாழும்போது நமது இறப்புக்குப் பிறகு,
கடவுளை நேரடியாக தரிசிப்போமென்றும் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையிலே உறுதியாக இருக்கிறார்கள்.

When every devotees worship God, they mentally see God. When they live with devotion and clean in their heart…; they believe they will meet God after this Life. They are strong in their own believe.

*நேற்றும் இன்றும் என்றும் மாறாத ஆண்டவர் சொல்கிறார்: The word of God says:*

## மத்தேயு / Matthew 5:8

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
Blessed are the **pure in heart**: for they shall see God.

**Pure:** Clean, சுத்தமான, தூய: spotless, களங்கமற்ற: genuine, அசல்: unmixed with otherthings, கலப்பில்லாத: untainted, அழுக்கற்ற. குற்றமற்ற, மாசற்ற: sheer, சுத்த, வெறும்: Chaste, கற்புள்ள.
**Clean:** pure, free from blemish or dirt, சுத்தமான, மாசில்லாத: without bungling, குற்றமற்ற.
**see:** 1. to perceive with the eyes; look at. 2. to view; visit or attend as a spectator: to see a play. 3. to perceive by means of computer vision. 4. to scan or view, especially by electronic means: The satellitecan see the entire southern half of the country. 5. to perceive (things) mentally; discern; understand: to see thepoint of an argument.

*இருதயம்….சுத்தம்…..தேவன்…..தரிசிப்பது…..இந்த வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.*

மனதார கடவுளை தரிசிக்க, எண்ணிமுடியாத காரியங்களை பாரம்பரியமாகவோ, சடங்காசாரமாகவோ, மரியாதைக்குரிய காரியமாகவோ, கடமைக்காகவோ, பயத்துக்காகவோ…..இன்னும் பல காரணத்தினாலோ செய்துகொண்டிருக்கிற மக்களுக்கு இந்த கடவுளின் வார்த்தையைக் கொண்டு என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

To see the God, People are doing many different things as per the tradition, culture, procedure from their ancestors, or just as a duty or just as a fear (even if they don't believe)…. What can you say to those people with this word of God?

எவ்வளவோ காரியங்களை கடவுளுக்கு செய்கிற பலர், அந்த கடவுள் என்ன நமக்கு சொல்லியிருக்கிறார் என்பதை அறிய விரும்பாமலும் அறிய நேரமில்லாமலும் இருக்கிற மக்களுக்கு இந்த கடவுளின் வார்த்தையைக் கொண்டு என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

People do many things to God: But they don't want to read the word of God to understand what God says to us. many time they don't have time to read. What can you say to those people with this word of God?

. . . . . . . .

. . . . . . . .

. . . . . . . .

- இருதயத்திலே எப்படி சுத்தமுள்ளவர்களாக வாழ்வது? எவ்வளவு சுத்தமுள்ளவர்களாக வாழ்வது?
- ”இப்படி வாழ்ந்து, இதைச்செய்தால் போதும்” என்று நமக்கு நாமே ஒரு எல்லையை ஏற்படுத்தி வாழும்போது நம் இருதயம் சுத்தமாக இருப்பதுபோல **நாம்** உணரலாம்.
- இருதயத்தையும் நம்மையும் படைத்த கடவுளுக்கு அது எப்படித் தோன்றும்?
- How do we live pure in our heart? How much clean we need in our Heart?
- Many are living by their own concept as they say: "This way to live is enough: If we do this much is enough:". By this means they feel they are clean in their heart.
- How these things will look for our God who created us and our heart?

*சிந்தித்துப் பாருங்கள். Think about this.*

*உங்கள் சிந்தனைக்கு தொடக்கமாக ஒரு உதாரணம்:*

நமது kitchenஐ, நமக்கு அறிந்த வழிகளில் சுத்தம் செய்து, Kitchen சுத்தமாக உள்ளது என்று நினைக்கிறோம்.
நாம் சுத்தம் செய்த அதே Kitchenஐ ஒரு Doctor (Ref: TV program), கடவுள் கொடுத்த அறிவினாலே அவர் ஆராய்ச்சி செய்து அதிலே பல வேண்டாத கிருமிகள் இருப்பதாக சொல்கிறார்.
நம்மையும் அந்த Doctorஐயும் படைத்த கடவுள் அந்த Kitchenஐ நோக்கிப் பாத்தால், என்ன சொல்லுவார்? *சிந்தித்துப் பாருங்கள்.*

*An Example for you to start thinking:*

As we clean our Kitchen with own known way, we think it is clean.
The same kitchen is examined by one Doctor with the knowledge he got through God, and he found so much dirty, bacteria…in the cleaned kitchen.
Suppose Our God who created us and that Doctor, see that kitchen: what God will find?

. . . . . . . . . . .

*Please think about this example.*

வாழ்க்கையின் சூழ்நிலைகளை......4 விதமாக... நிதானமாக சிந்தித்துப் பாருங்கள்:
1. நாம் நமக்கு அறிந்த அளவில்,
2. நமக்கும் அதிகமாக அறிந்தவர்களின் அளவில்,
3. நமக்கும் குறைவாக அறிந்தவர்களின் அளவில்,
4. நம் அனைவரையும் படைத்து வழிநடத்துகிற ஆண்டவரின் பரிபூரண அளவில் (ஜீவனுள்ள வசனத்தின்படி).

இப்படி 4 விதமாக கவனித்துப் பார்த்து சிந்தித்தீர்கள் என்று சொன்னால்.......
சகலமும் பரிபூரணமாக வாசம் செய்யும் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் மேலும் மேலும் அறிவதிலே உள்ள வாஞ்சை ஒவ்வொரு நாளும் உங்களுக்குள்ளே வளர்ந்துகொண்டேயிருக்கும்.
அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். என்று வேதம் சொல்கிறது.

Please think our Life situation in 4 way as follows:
1. Think in the way we understand.
2. Think in the way the people undestand more than us.
3. Think in the way the people understand less than us.
4. Think in the perfect (fullness) way of our God who created all of us. (Through HIS Living word of God)

If you think your life in this way, you will love to know about Christ and His Living Word more and more every day.
Bible says: "Because he has set his love upon Me, therefore I will deliver him; I will set him on high, because he has known My name.

. . . . . . . . . . .

இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமான கடவுளின் பார்வைக்கு தக்கதாக, நம் இருதயத்தை சுத்தம் செய்ய நம்மாலே எப்படி முடியும் ?
நாம் என்ன செய்வது? எப்படி தேவனை தரிசிப்பது?
How can we clean the Heart as per the Lord who search the heart and examine the mind?
How can we do this ? How can we see God?
நம்மீது இரக்கமும் உருக்கமும் நீடிய பொறுமையும் பூரண கிருபையும் வைத்துள்ள தேவனே நம்மிடம் வார்த்தையாக வந்து சொல்கிறார்: (யோவான் 15:3 & 17:17)

- நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே **சுத்த**மாயிருக்கிறீர்கள்.
- உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.

Our God full of compassion, and gracious, longsuffering, and plenteous in mercy and truth.
God says: You are already clean because of the word which I have spoken to you. (John 15:3)
Sanctify them by Your truth. Your word is truth. (John 17:17)

நாம் தேவனுக்குள் நெருங்கி வாழ்ந்து, அவர் அறிவுறைகளை கேட்டு கேட்டு வளரும்போது, **"நம்முடைய பாவங்களை கிறிஸ்து ஏற்றுக்கொண்டார்.** அதினாலே நம் இருதயம் சுத்தமாகிறது. நம்மாலே அல்ல, அவராலே ஆகிறது" என்ற விசுவாசம் நம் இருதயத்திலே வளரும்.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் நம்மை இரட்சிக்கும். *அப்பொழுது....*
இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.
என்ற ஆண்டவரின் வார்த்தைக்கு அவரே நம்மைத் தகுதி படுத்துவார்.
When we live close to God and read what God says to us and understand more and more,
Our heart will believe that "Since Our Lord Jesus Christ take all our sins, our heart get clean. It is not because of me; It is because of our Lord Jesus Christ." When we believe we get the great salvation by our Lord. Then.....God will make us qualify for His word:
"Blessed are the pure in heart: for they shall see God.". *This is the only way we can see God.*

நித்திய ஜீவனுள்ள வார்த்தை, உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி.
The Bible word is the TRUE light which gives path to our Life to reach the Eternal Life.
இந்த ஜீவனுள்ள வார்த்தைகளை விசுவாசித்து வாசித்தால், கிறிஸ்துவை அறிந்துகொள்வீர்கள். (*அல்லது)*
இந்த ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்து அறிந்துகொண்டால், கிறிஸ்துவை விசுவாசிப்பீர்கள்.
If you believe and read the Bible, you will understand Christ. (or)
If you read and understand the Bible, you will believe Christ.
***(இரண்டிலும் நீங்கள் செய்யவேண்டியது...வாசிப்பது.) (In both case, you have to read....)***
இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாக இருக்கிற ஜீவனுள்ள வசனத்தை வாசியுங்கள்.
It judges the thoughts and attitudes of our heart. Please believe and read the Bible. God Bless you.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம் அனைவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார். ஆமென்.
சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று. (கொலோசெயர் / Colossians 1:19-20)
For it pleased the Father that in Him all the fullness should dwell, and by Him to reconcile all things to Himself, by Him, whether things on earth or things in heaven, having made peace through the blood of His cross. (NKJV)
Let us Pray